Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.No.109/2018, Cr.No.268/2017, Tirupathur Taluk PS
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புஷ்பா | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | காந்தி | தொழில் | கூலி |
| கிராமம் | தண்ணீர்பந்தல் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 14th day of August 2025.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை (எதிரி ஆஜர்)**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். சுமார் 6 – 7 வருடங்களுக்கு முன்பு நான் வேலைக்கு சென்று விட்டு வந்து சாப்பிட்டுக்கொண்டிருந்த போது "அய்யோ, அப்பா" என்று கூச்சல் சத்தம் கேட்டு ஜன்னல் வழியாக பார்த்த போது அங்கு யாரும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி வழங்கபப்ட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

மட்றப்பள்ளி – தண்ணீர்பந்தல் சாலையில் துடைப்பம் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 09.05.2014 அன்று காலை சுமார் 10.10 மணியளவில் பனமர நிழலில் உட்கார்ந்திருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடன் எங்கள் பகுதியை சார்ந்த லட்சுமி, சுசிலா ஆகியோர் உட்கார்ந்திருந்தார்கள் என்றால் சரியல்ல. எங்களுக்கு தெரிந்த மட்றப்பள்ளியை சார்ந்த சாந்தசீலன் மனைவி அருணாதேவி அவருடைய இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. அவருக்கு பின்னால் சென்ற எதிரி இருசக்கர வாகனத்தை

இருவரில் ஒருவர் உட்கார்ந்திருந்த எதிரியானவர் அருணாதேவியின் கழுத்திலிருந்த தங்க சங்கிலியை அறுத்து சென்று விட்டார்ள ன்றால் சரியலவ்ல. எதிரியானவர் வேகமாக தங்க சங்கிலியை அறுக்கும் போது அருணா தேவி நிலை தடுமாறி கீழே விழுந்ததால் இடது முழங்கையில் சிறாய்ப்பு காயம் மற்றும் தோள் பட்டையில் கண்ணிய காயமும், தலை கை கால்களில் இரத்தகாயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் நான், லட்சுமி சுசிலா ஆகியோர் தண்ணீர் கொடுத்து உட்கார வைத்தோம் என்றால் சரியல்ல. தங்க சங்கிலியை பறித்த எதிரிகள் அவருடைய இருசக்கர வாகனத்தில் தண்ணீர்பந்தல் நோக்கி சென்று விட்டார்கள் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் காயம்பட்ட அருணாதேவியை அவருடைய நண்பர் அருண்பிரகாஷ் என்பவர்தான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் நேரில் பார்த்ததாக கூறிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை என்னால் அடையாளம் காட்ட முடியாது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை</u>**

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

KOVENDHAN S

JUDICIAL MAGISTRATE NO.II
Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.